2022 மே 6]

வசதிகளைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏதேனும் கருத்துரு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே அங்கே மேயராக இருந்தவர். உங்களுக்கெல்லாம் தெரியும்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 560 கோடி ரூபாயில் மதுரை மாநகராட்சிக்கு மட்டும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். எனவே, அந்தத் திட்டம் எந்தெந்த இடங்களுக்குச் செல்கிறது என்பதைக் கவனித்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதையும் கவனத்தில் கொண்டு, மதுரை மாநகரத்தில் இருக்கிற மக்கள் என்னென்ன வசதிகளைப் பெறுகிறார்களோ, அதைப்போல, மதுரையைச் சுற்றியிருக்கிற பகுதிகளில் உள்ள மக்களும் அந்த வசதிகளைப் பெறுகிற வகையில் அவற்றைக் கவனித்து, அரசின் நிதிநிலைமைக்கேற்ப, அனைத்தும் செய்து தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 232, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

232—

பொறியியல் கல்லூரி

***9773—திரு. சி. மகேந்திரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி அமைந்துள்ள திருப்பூர் மாவட்டத்தில், 6 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், 13 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 7 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், 31 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அம்மாவட்ட மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதியில் புதிதாக ஒரு பொறியியல் கல்லூரி துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன் அவர்கள்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் +2 பொதுத் தேர்வு எழுதும் மாணவச் செல்வங்களுக்கு இப்பேரவையின்மூலம் எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருப்பூர் மாவட்டம் 2009 ஆம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை +2 தேர்வில் மாணாக்கர்கள் மாவட்ட அளவிலான தேர்ச்சியில் முதல் 5 இடங்களைப் பெற்று திருப்பூர் மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். திருப்பூர் மாவட்டத்தில் அரசு பொறியியல் கல்லூரி இல்லாததால், பொறியியல் படிப்பில் சேர விரும்பும் மாணவர்கள் வெளி மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. மேலும், மாணவிகள் வெளி மாவட்டங்களுக்குச் சென்று பயில, பெற்றோர்கள் விரும்பாததாலும், அவர்களுடைய குடும்பத்தின் பொருளாதாரச் சூழ்நிலையின் காரணத்தினாலும், மாணாக்கர்கள் அவர்கள் விரும்பும் பொறியியல் துறையைத் தேர்ந்தெடுக்காமல், கலை மற்றும் அறிவியல் பாடப் பிரிவுகளைப் பயில்கின்றனர்.

எனவே, பொறியியல் கல்லூரிகளில் சேர விரும்பும் மாணவர்களின் நலன் கருதி, திருப்பூர் மாவட்டத்திலே பொறியியல் கல்லூரி இல்லாததால், நகரப் பகுதிகளையும், கிராமங்களையும், மலைவாழ் மக்களைக் கொண்ட கிராமங்களையும் உள்ளடக்கிய என்னுடைய மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் புதிதாக அரசுப் பொறியியல் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா

2022 மே 6]

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோளாக வைத்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயல்பட்டுக் கொண்டிருக்கிற பொறியியல் கல்லூரிகளையெல்லாம் மூடிக் கொண்டிருக்கிற சூழ்நிலை கடந்த காலங்களில் உருவாகி, தற்போதும் நடந்து வருகிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். 6 சுயநிதிக் கல்லூரிகள் செயல்பட்டு வந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்திலேயே ஒரு கல்லூரியை மூடிவிட்டார்கள்.*

பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் மட்டும் கிட்டத்தட்ட 2,00,348 இடங்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றில் சேர்ந்திருக்கிற மாணவர்களுடைய எண்ணிக்கை 1,28,414 தான். 71,934 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்தை மட்டும் எடுத்துக்கொண்டால், அங்கிருக்கிற பொறியியல் கல்லூரிகளில் மொத்தம் இருக்கிற இடங்களின் எண்ணிக்கை 2,010 ஆகும். அவற்றில் சேர்ந்திருக்கிற மாணவர்களின் எண்ணிக்கை 782 தான். அதனால், மாணவர்கள் மற்ற மாவட்டங்களுக்குச் செல்கிறார்கள் என்று சொல்ல வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்திலேயே இவ்வளவு இடங்கள் காலியாக இருக்கின்றன.

அதனால்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறியியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்கிற எண்ணத்தில் 'நான் முதல்வன்' என்ற திட்டத்தை அறிவித்து, அதிலும் குறிப்பாக, பொறியியல் கல்லூரி மாணவர்கள் மட்டுமல்லாமல், தொழில்முனைவோர் சங்கத்தினரையும், பல்கலைக்கழக துணைவேந்தர்களையும், 23–4–2022 அன்று அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் வைத்து பேச்சுவார்த்தை நடத்தி, புதிய பாடத்திட்டங்களைக் கொண்டு வந்து பொறியியல் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். அப்பொழுதுதான்

பொறியியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேருவார்கள். அவர்கள் பொறியியல் படிப்பைப் படித்துவிட்டு வேலையில்லாமல் இருந்தால், பொறியியல் படிப்பை ஏன் படிக்க வேண்டும் என்ற கேள்வி உருவாகிறது. அதனால்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் சேர்கிறார்கள். அதனால்தான், அதுபோன்றதொரு நிலையைத் தவிர்க்க வேண்டும் என்கிற அடிப்படையில் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். ஆகவே, வருங்காலங்களில் பொறியியல் கல்லூரிகளில், குறிப்பாக, இந்த ஆண்டும் admission அப்படித்தான் இருக்கும் என்று எண்ணுகிறோம். இந்த நிலைமை ஓரளவிற்கு improve ஆகும். அவ்வாறு ஆன பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன் அவர்கள்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி மற்றும் உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 3,000–க்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்போது உடுமலை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயின்று வருகிறார்கள். ஆண்டுக்காண்டு மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருகிறது. அங்கு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப, போதிய பாடப் பிரிவுகளை அதிகப்படுத்தவில்லை. மேலும், ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவர்கள் அதிகளவில் கல்லூரியில் சேர விரும்பி விண்ணப்பித்தாலும்கூட, மாணவர்கள் கல்லூரியில் சேர முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே, உடுமலை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதிய கட்டடங்கள் அமைத்து, வெவ்வேறு பாடப் பிரிவுகளை ஏற்படுத்தி, ஏற்கெனவே உள்ள பாடப் பிரிவுகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்த அரசு முன் வரவேண்டும். இல்லையென்றால், மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு எனது மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மடத்துக்குளம் வட்டத்தில் புதியதாக கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேற்கண்ட இரண்டு கோரிக்கைகளில், ஏதாவது ஒன்றையாவது நிறைவேற்றித்தர அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2022 மே 6]

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னேன்; திருப்பூர் மாவட்டத்தில் அரசு கலைக் கல்லூரிகள் குறைந்த அளவில் இல்லை, அதிக அளவில் இருக்கின்றன. அதிலும் அந்த மாவட்டத்தின் அமைச்சர்களாக இருக்கின்ற மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் சகோதரி திருமதி கயல்விழி அவர்களும் வைத்த கோரிக்கையின் அடிப்படையில், சென்ற ஆண்டுகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அந்த மாவட்டத்திற்கு ஒரு கல்லூரி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் மறுக்க முடியாது. எனவே, முடிந்தவரையில் அரசு, கல்லூரிகளை வழங்கிக்கொண்டிருக்கிறது. அதிலும், கல்வி மாவட்டங்களான கோவை, திருப்பூர் ஆகிய இடங்களில் கல்லூரிகள் அதிக அளவிலே இருக்கின்ற காரணத்தினால், பின்தங்கிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அவற்றை முன்னேறச் செய்வதற்கான ஏற்பாடுகளை இந்த அரசில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபோல், படிப்பது பெரிய விஷயம் அல்ல, வேலைவாய்ப்புகளையும் அதிக அளவில் கொடுக்க வேண்டும் என்பதால்தான் தொழில்முனைவோர்களுடன் தொழில் துறை மற்றும் தொழிலாளர் நலத் துறை உள்ளிட்ட அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து, செயல்படுத்துவதற்கான முயற்சிகளை இந்த ஓராண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில்குமார் அவர்கள்.

திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கள்ளக்குறிச்சி தொகுதி மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தைப் பற்றி நன்கு அறிந்தவர். கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு அரசு மகளிர் கல்லூரி அவசியம் தேவைப்படுகிறது. தற்போது அத்தொகுதி பெண்கள், உயர் கல்வி படிப்பதற்கு தனியார் கல்லூரியை தேடிச் சென்று படிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் மகளிர் கல்லூரி தேவை, அதுதானே! வருமா என்ற கேள்வியைக் கேட்டு, அமருங்கள்.*

திரு. மா. செந்தில்குமார்: *ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். மகளிரைப் பொறுத்தவரையில், இளம் வயதிலேயே திருமணம் செய்யும் சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதைப்பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, மகளிர் கல்லூரி அவசியம் தேவை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வலியுறுத்திக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சட்டமன்றப் பேரவையில் அறிவித்ததன் அடிப்படையில்,* Shift system*–ல் மகளிருக்குக் கொடுக்கலாம் என்று சொன்னதற்கே,* Shift system*–ல் கொடுக்கக் கூடாது என இன்றைய பத்திரிகைச் செய்தியில் தலையங்கமே எழுதியிருக்கிறார்கள். பெரியார் கொள்கையில் இருவரும் இணைந்து, பெண்கள் கல்லூரியென்று தனியாக உருவாக்குவதைவிட இருபாலரும் சேர்ந்து கல்வி பயில்வதில் எந்தவிதத் தவறும் இல்லை. அதைத்தான் வளர்க்க வேண்டுமென்று நினைக்க வேண்டும். இதைத்தான் மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்களும் கூறினார்கள். அதனால் இதுபோன்ற கோரிக்கைகள் சில நேர்வுகளில் வருமேயானால், அதுகுறித்து பரிசீலித்து முடிவெடுக்கப்படும். அதனால், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இதற்கான அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* K.C. *கருப்பணன் அவர்கள்.*

திரு. K.C. கருப்பணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறியியல் கல்லூரிகளையெல்லாம் மூடிக்கொண்டிருக்கிறார்கள் என்று*

2022 மே 6]

சொல்கிறார்கள். எங்களுக்கு மிகவும் வேதனையாக இருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நானும் 15, 20 வருடங்களாக கல்லூரிகள் நடத்திக்கொண்டிருக்கிறோம். எனவே, அதிலுள்ள சிரமங்கள் அனைத்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஒன்று, வருடா வருடம் Examination Fees*–ஐ ஏற்றிக்கொண்டே வருகிறார்கள். அதேபோன்று, மாணவர் சேர்க்கையைவிட ஆசிரியர் பணியிடங்களை அதிகப்படுத்த வேண்டும் என்று ஒரு* G.O. *போட்டிருக்கிறார்கள். அதேபோன்று 2 அல்லது 3 வருடத்திற்கு ஒரு முறை* syllabus*–ஐ மாற்றிக்கொண்டே வருகிறார்கள். அதுவும் இல்லாமல் கணினிகளை 2*G *ஆக இருப்பனவற்றை 4*G *ஆகவும், 5*G *ஆகவும் மாற்றுங்கள் என்று ஏகப்பட்ட* conditions*–ஐ போட்டுக்கொண்டே வருகிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் தற்போது* college*–ஐ* continue *பண்ணப் போகிறீர்களா?* Wind–up *பண்ணப் போகிறீர்களா?*

திரு. K.C. கருப்பணன்: *தற்போதைய சூழலில், தெரிந்த விஷயம்தான்.* Mechanical *என்று சொன்னால், அதில் இரண்டு* subjects *வைத்திருக்கிறோம். 120* seats *உள்ள இடத்தில் 60* seats fill–up *ஆகின்றன என்றால், 60* seats *அதற்கு அடுத்த வருடம்* fill–up *ஆகும் வாய்ப்புகூட உள்ளது. ஆனால், அவ்வாறு 60* seats *மாணவர் சேர்க்கை இல்லாத இடங்களிலும் ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய நிலை குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. K.C. கருப்பணன்: *இவற்றையெல்லாம்* relax *செய்து, பழைய நடைமுறையைக் கொண்டுவர வேண்டும். 15 வருடங்களுக்கு முன்பு, 1 இலட்சம் ரூபாயாக இருந்த* fees, *இன்றைக்கு ரூ.75,000, ரூ.50,000, ரூ.35,000 என்று குறைந்துவிட்டது. ஆனால், ஆசிரியர் சம்பளம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள். என்ன வேண்டும் என்பதை மட்டும் கேளுங்கள். உங்கள்* college*–க்கு என்ன வேண்டும் என்பதை மட்டும் கேளுங்கள்.*

[2022 மே 6

திரு. K.C. கருப்பணன்: ஆசிரியர் சம்பளம் ஏறிக்கொண்டே செல்கிறது. Syllabus–ஐ மாற்றி, பல conditions–ஐ போடுகிறார்கள். மாணவர் சேர்க்கையைவிட ஆசிரியர் பணியிடங்களை அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இவற்றையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரிசெய்து கொடுத்தார்களேயானால், கல்லூரிகள் மேலும் சிறப்பான முறையில் திறம்பட நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–20

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுதான் அவருடைய கட்சி உறுப்பினர் அவர்கள், 'தனியார் கல்லூரிகளில் கல்விக் கட்டணம் கட்டவில்லையெனில், Certificate கொடுக்க மாட்டேன் என்கிறார்களே' என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினரும் தனியார் கல்லூரியை நடத்திக்கொண்டிருப்பவர். எனவே, இவருடைய கஷ்டத்தை முதலில் அவரிடம் சொல்லச் சொல்லுங்கள். சுயநிதிக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில்தான் சொல்கிறேன். (குறுக்கீடு) அதுபோன்ற சூழ்நிலைகள் இருக்கின்ற காரணத்தினால், தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், பொறுப்பாக, அனைத்துக் கல்லூரிகளிலேயும் அவரவர்களின் தேவைக்கேற்ப என்ன பணிகளைச் செய்ய வேண்டுமோ அவை அனைத்தையும் செய்து கொண்டிருக்கிறோம்.

அதே நேரத்தில் சுயநிதிக் கல்லூரிகள் தன்னிச்சையாகச் செயல்பட முடியாது. அவையும் அரசாங்கத்தினுடைய, பல்கலைக்கழகத்தினுடைய கட்டுப்பாட்டில் இயங்க வேண்டும். பாடத் திட்டத்தை அடிக்கடி மாற்றுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். வேலைவாய்ப்புகள் கிடைப்பதற்கேற்ப பொறியியல் கல்லூரிகளின் பாடத் திட்டத்தை மாற்ற வேண்டுமென்றுதான் ஒரு Syllabus Committee–ஐ அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டு, அண்ணா பல்கலைக்கழகத்தில் ஒரு Syllabus Committee–ஐ அமைத்திருக்கிறோம். வேலைவாய்ப்புகள்

2022 மே 6]

கிடைப்பதற்கேற்ப, பாடத் திட்டங்களை மாற்றியமைத்து, அதை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 233, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

233—

தொழிற்பூங்கா

***12040—திருமதி க. சிவகாமசுந்தரி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் ஊராட்சி ஒன்றியத்தில் தொழிற்பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கிருஷ்ணராயபுரம் தொகுதி அடங்கிய கரூர் மாவட்டத்தில் சர்வதேச தரத்திலான ஜவுளிப் பூங்கா ஒன்றினை 200 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்க நிலம் தெரிவு செய்யப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. சிவகாமசுந்தரி அவர்கள்.*

திருமதி க. சிவகாமசுந்தரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி அடங்கிய கரூர் மாவட்டத்தில் இடம் தெரிவு செய்யப்பட்டு, விரைவில் தொழிற்பூங்கா அமைக்கப்படும் என்று தெரிவித்தமைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதியின் பெரும்பகுதி மிகவும் வறட்சியான பகுதியாகும். கடவூர் வட்டத்தில் 23 வருவாய் கிராமங்கள் உள்ளன. இங்கு